**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 96/2025**

**Prosecution witness : அ.சா. 5** **Date : 09.10.2025.**

| | |
|---|---|
| **Name : இளையராஜா** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஆண்டிக்கரையில் குடியிருந்து சென்ட்ரிங் வேலை செய்கிறேன். கடந்த 16.10.2024ம் தேதியன்று மாலை 3.30 மணிக்கு மேச்சேரி செல்லும் சாலையில் உள்ள HP பெட்ரோல் பங்க் முன்பாக மேச்சேரி காவல் துறையினர் வரைபடம் வரைந்தார்கள். அதில் நான் மற்றும் சங்கர், சாமிநாதன் மூவரும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம். 16.10.2024ம் தேதி நடந்த சாலை விபத்து சம்மந்தமாக போலீசார் வரைபடம் வரைந்தார்கள். பார்வை மகஜரில் உள்ள விவரம் தெரிந்து கொண்டேன். பார்வை மகஜர் **அ.சா.ஆ.2** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் எனக்கு எழுத படிக்க தெரியாது. எனக்கு படித்து காண்பிக்கவில்லை என்றால் காண்பித்தார்கள். ஆனால் என்ன எழுதியிருந்தது என்று சொல்ல முடியுமா என்றால் தெரியவில்லை. அடிப்பட்டவர் உறவினர் என்றால் ஆமாம். நான் காவல் நிலையம் சென்றிருந்தேனா என்றால் ஆமாம். கையொப்பம் காவல் நிலையத்தில் வாங்கினார்கள் என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 96/2025**

**Prosecution witness : அ.சா. 6** **Date : 09.10.2025.**

| | |
|---|---|
| **Name : சங்கர்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஆண்டிக்கரையில் குடியிருந்து டிராக்டர் ஓட்டி வருகிறேன். கடந்த 15.10.2024 ம் தேதியன்று மாலை 3.00 மணிக்கு மேச்சேரி செல்லும் சாலையில் உள்ள பொட்டனேரியில் உள்ள பெட்ரோல் பங்க் முன்பாக விபத்து சம்மந்தமாக மேச்சேரி காவல் துறையினர் போன் செய்த போது நான் சென்ற நிலையில் வரைபடம் வரைந்தார்கள். அதில் நான் மற்றும் இளையராஜா, சாமிநாதன் மூவரும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம். பார்வை மகஜரில் உள்ள விவரம் படித்து காண்பித்ததால் தெரிந்து கொண்டேன். பார்வை மகஜரில் உள்ள 1வது கையொப்பம் **அ.சா.ஆ.3** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) இறந்தவர் எனக்கு உறவினர் என்றால் சரிதான். விபத்துஏற்பட்டவுடன் காவல் நிலையம் சென்றேன் என்றால் ஆமாம். காவல் நிலையத்தில் கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம். இரு கையொப்பம் செய்தேன். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் தெரியாது என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 96/2025**

**Prosecution witness : அ.சா. 7** **Date : 09.10.2025**

| | |
|---|---|
| **Name : சாமிநாதன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஆண்டிக்கரையில் குடியிருந்து வெல்டிங் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்தது என் உறவினர் செம்பாகவுண்டர் ஆவார். கடந்த 15.10.2024 ம் தேதியன்று மாலை 3.15 மணிக்கு மேச்சேரி செல்லும் சாலையில் உள்ள பொட்டனேரியில் உள்ள பெட்ரோல் பங்க் முன்பாக இரு சக்கர வாகனத்தில் செல்லும் போது டேங்கர் லாரி மோதி விபத்து ஏற்பட்டதாக தெரிந்து கொண்டேன். விபத்தின் காரணமாக செம்பா கவுண்டருக்கு கால், வயிறு ஆகிய பகுதியில் காயம் ஏற்பட்டு மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று பிறகு உடனடியாக மேல் சிகிச்சைக்காக சேலம் கோகுலம் மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்த போது சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். பிரேத பரிசோதனையின் போது நான் உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) நான் சம்பவயிடம் செல்லவில்லை என்றால் அந்த வழியாக குடும்பத்துடன் வந்தேன். யார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. விபத்திற்கு யார் காரணம் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/- தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.